Registered No. M. 1229.

உ

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

விவேகோதயம்

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று
வெளிவரும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

அறிவுடையார், எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் "இலர்"—திருக்குறள்

தொகுதி உ. | பிங்கள ஹு ஆவணிமீ 1917ஹு ஆகஸ்டுமீ | பகுதி எ.

பொருளடக்கம்.

புதல்வர்கடமை:—	பத்திராதிபர்	193
சாணக்ய சாஹஸம் என்னும் சந்திரகுப்தசரித்திரம்	வி. பாலம்மாள்.	198
ஆத்திசூடி வெண்பா:—	அசலாம்பிகை அம்மாள்	204
கமலாவதி (தமிழ் நாடகம்):—	K. வேங்கடராமையர்	206
மூவர்க்கும் கூறும் மொழி:—	ம. கோபாலகிருஷ்ணையர்	209
ஆத்திசூடி வெண்பாவைப் பற்றிய ஐயங்கள்	கே. எஸ். நீலாயதாக்ஷி	211
வள்ளுவர் நேரிசை:—	அரசஞ் சண்முகனார்	212
சிறுவர்க்காகும் கதைப் பூங்கொத்து:—	வி. சு. நடராஜன்	215
விநோதக்கூற்று:—	பாலகிருஷ்ணன்	217
விடுகதை வினாவுக்கு விடை:—	வி. இராமசாமி	217
சமாசாரக் கொத்து:—	பத்திராதிபர்	218
புத்தக மதிப்புரை:—	௸	220
விளம்பரங்கள்:—	மானேஜர்	220
சமாசாரக்கொத்து (தொடர்ச்சி)	பத்திராதிபர்	222
விளம்பரங்கள் (தொடர்ச்சி)	மானேஜர்	223

சொந்தக்காரர்:— ம. கோபாலகிருஷ்ணையர்

ம. கோபாலகிருஷ்ணையர்
வி. பாலம்மாள் } பத்திராதிபர்.

திருமங்கலம் ஸ்ரீகிருஷ்ண விலாசம் அச்சியந்திரசாலை

வருஷ சந்தா ரூ 2-0-0. 1917. [தனிப்பிரதி அணா 3
வெளி நாடுகளுக்கு ரூ 2—4—0.

குறிப்பு:—இதிலடங்கிய விஷயங்களைப் பத்திராதிபர் அனுமதியின்றி எவரும் பிரசுரிக்கக் கூடாது.

மதுரை எக்ஸெல்ஸியர் பிரஸில் டைடில் மாத்திரம் அச்சிடப்பட்டது.

பட்டு பீதாம்பர கம்பெனி

திருப்தியில்லாததைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் — **ஸ்ரீ காசி** — பட்டு பீதாம்பரக் கியர்ட்லாக் இனமாய் அனுப்பப்படும்.

உருத்திராக்ஷங்கள், ஜபமாலைகள் பரிசுத்தமானவை.

108 உள்ள மாலை 1-க்கு 6 அணா முதல் ரூபா 12வரை, விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறித்க இருக்கும். 6 முகக் கண்டிகள் 33 உள்ளது, கண்டி 1-க்கு ரூபா 1 முதல் 10 வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது, கண்டி 1-க்கு அணா 10முதல் ரூபா 10வரை. விலை அதிகப்படுவதுபோல், மணிகள் பெரிதாக இருக்கும். சம்மதமில்லாதவை திரும்பப் பெற்றுக் கொள்ளப்படும்

வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண் பட்டு வேஷ்டிகள் கோயமுத்தூர் சேலம் வேஷ்டிகள் மாதிரி: ஸன்ன கம்பி ருத்திராக்ஷக் கம்பி ஜரிகைக் கம்பி போட்டவை

4	முழம்	2	அகலம்	1-க்கு	ரூபா	4-8	முதல்	7	வரை.
6	,,	2½	,,	1-க்கு	,,	7	,,	9	,,
6	,,	3	,,	1-க்கு	,,	10	,,	12	,,
7	,,	2½	,,	1-க்கு	,,	8	,,	12	,,
7	,,	3	,,	1-க்கு	,,	10	,,	14	,,
8	,,	3	,,	1-க்கு	,,	12	,,	18	,,
9	,,	3	,,	1-க்கு	,,	14	,,	20	,,
10	,,	4	,,	1-க்கு	,,	15	,,	22	,,

பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமாக சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்யப்பட்ட உறுதியும், நைஸும், நேர்த்தியுமான கம்பளிப் போர்வைகள், 6 முழநீளம், 3 முழ அகலம் சிவப்பு முதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன உருப்படி 1-க்கு ரூபா 5—8—0. ஷை சிறிது 1-க்கு ரூபா 4—8—0. கேம்ளர்ணப்போர்வை 1-க்கு ரூபா 6—8—0. தபால் செலவு பிரத்தியேகம்.

காசி வயிரவர் கயிறு.

முதல் நெம்பர் 100 க்கு	...	...	3—0—0
2-வது நெம்பர் 100-க்கு	...	...	2—0—0
3-வது நெம்பர் 100-க்கு	...	...	2—0—0
4-வது நெம்பர் 100-க்கு	...	...	0—6—0

குழந்தைகள்.

குழந்தைகள் விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால் செய்த செம்பு, குடம், கண்டி முதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறு செட்டு 1-க்கு ரூபா 2. பெரிய செட்டு 1-க்கு ரூபா. 4

உடனே எழுதுங்கள் — விலாசம்:— மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி, தாரா நகர் தெரு, காசி

Manager, Silk Petamber Co., Dharnagar St, Benares City.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

விவேகோதயம்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று
வெளிவரும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"அறிவுடையார், எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"—*திருக்குறள்.*

தொகுதி உ.	பிங்கள௵ ஆவணிமீ 1917௵ ஆகஸ்ட்மீ	பகுதி எ.

புதல்வர் கடமை.

(166–ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இதுகாறும் பெற்றோர்களிடம் மக்கள் காட்ட வேண்டிய அன்பின் முக்கிய லக்ஷணங்கள் மூன்றினுள் இரண்டு கூறி, அவற்றின் இயல்பை யாவரும் நன்குணருமாறு உதாரண முகத்தாலும் விளக்கிக் காட்டினோம். இனி, அன்பின் மூன்றாவது லக்ஷணம் கூறுவம். அஃது யாதெனில் "போட்டி யறியாமையே" யாம். அதாவது தாய் தந்தையரை ஒப்பாரும், அவரினும் மிக்காரும் ஒருவர் உளர் எனக் கருதாது, அவர்களை நன்கு பேணுதலாகும்.

கண்டோர் இகழக் காதலன் வைகினும்
"அந்நா யகனே, அவனியில் எவரினும்
ஏந்தெழில், இளமை, இசை, இவை மிக்கான்,
காந்தையர் கண்களைக் கவருநோக் கத்தான்,
நயனுடை இன்சொலன்; நலமிகு வாய்மையன்"
எனக்குல மகள்எணும் இயல்பினைப் போன்றும்;
தேசெலாங் குன்றிய மாசெலாங் குருபியை
"ரதியினும் சிறந்த அதிஅழ குடையவள்"
என்றே காமுகன் எண்ணிடல் போன்றும்;

பெற்றோர்கள், வேற்று மனிதர் கண்ணுக்குக் கேவலமானவர்களாயும், வெறுப்பையே விளைக்கக் கூடியவர்களாயும், குறைகள் பலகொண்

டிருப்போராயும் காணப்படினும், அவர்களது மக்கள், மெய்யன் புள்ளவர்களாய், அப் பெற்ரோரினும் சிறந்தவரும் சற்குண சம்பன்னருமான உற்ரோர் ஒருவர் உண்டென ஒருபோதும் கருதலாகாது. ஏழைகளான கிழத்தந்தை தாயரினும் தவமேயுறுதி எனநினைந்து அவர்கள் பரிதவிக்கக் கான் புகுந்து, தவமியற்றிய ஒரு அந்தணன், இழிகுல வேடனால் நல்வழிப் படுத்தப்பட்ட விதத்தைக் கேளுங்கள்:—

விசிட்டாபுரம் என்ற ஊரில் கௌசிகன் என்ரோர் அந்தணன் இருந்தான். அவன் வசிஷ்டரிடம் உபதேசம் பெற்று நெடுங்காலம் யோகம் அப்பியசித்தும் தவமியற்றியும் வந்தவன். பன்னிரண்டு வருஷம் யோகாப்பியாசம் செய்தானதும், அவன் ஒருநாள் பிக்ஷைக்குப் புறப்பட்டுச் சென்று கொண்டிருக்கையில், வெயிலின் உக்கிரம் பொருது, ஒரு மரநிழலில் தங்கினன். சின்னஞ்சிறு கிளைக்கெல்லாம் காய்ந்து உலர்ந்த சருகுகள் சில அவன் தலைமீது உதிர்ந்தன. உதிரவே, அண்ணாந்து நோக்கினன் அந்தணன். ஒரு காக்கையும் கொக்கும் மரக்கிளைமீதிருந்து சண்டையிடுவதை அவன் பார்த்து விட்டான். உடனே அவனுக்குப் பிரமாத கோபம் வந்துவிட்டது. "அற்பப் பறவைகள் நீங்கள். என் தலையிலா சருகு உதிர்ப்பது!" என்று கூறிக்கொண்டே இரு விழிகளினின்றும் தீப்பொறி பறக்க அவற்றை ஏறிட்டுப் பார்த்தான். பார்த்த அந்நிமிஷமே, பாவம்!. அப்பறவைகள் இரண்டும் பற்றி எரிந்து பொடிசூரணமாகிப் பார்மீது உதிர்ந்தன. மட்டற்ற மகிழ்ச்சியே எய்தினன் மறையவன்.—பார்த்த மாத்திரத்தில் பஸ்மீகரம் செய்யும் சக்தி பன்னிரண்டே வருஷத்தில் அவனுக்குச் சித்தித்து விட்டதன்ரோ?—"நம்மினும் யோகாப்பியாஸம் வல்லோர் இந்நானிலத்தில் யார்?" என எண்ணி இறுமாந்தான். களைப்பாறியதும் அவன் அங்கிருந்து புறப்பட்டு ஒர் அக்ராரத்திற் புகுந்து ஒருவீட்டு வாயிலண்டை நின்று "பவதி! பிக்ஷாந் தேஹி" என்ருன். உடனே "மகனே! சற்றுப்பொறு. இதோ வருகிறேன்" என்று உள்ளிருந்தபடியே ஓர் உத்தமி கூறிய சத்தம் இவன் காதில்விழுந்தது. விழவே வாலிப சந்யாஸிக்குக் கோபத்தால் முகம் பொங்கியது; இருவிழிகளும் புரள, அவன், "பேதாய்! என்னைக் காக்க வைக்கும்படி அவ்வளவு துணிச்சலா உனக்கு? என் அபாரசக்தியை நீ இன்னும் அறிந்

தில்லை போலும்—" என்று எண்ணும் போதே, "மைந்த! உன் சக்தியைப் பற்றிப் பிரமாதமாய் எண்ணிவிடாதே. இங்குக் காக்கையும் இல்லை; கொக்கும் இல்லை. இரு இன்னும் அரைநாழிகை" என்று அதே உத்தமி கூறிய சொல் அவன் செவியி லுற்றது. அந்தணனுக்குத் திகைப்பும் வியப்பும் தோன்றின. காட்டிற் காக்கையையும் கொக்கையும் எரித்த விஷயம் வீட்டிலிருக்கும் இவள் எங்ஙனம் அறிந்தனள்?—"என்று அவன் யோசித்துக்கொண்டிருக்கும்போதே அன்னமும் கையுமாய் வந்தாள் அம் மாது. அவளைக் கண்டவுடனே அந்தணனைப் பிடித்திருந்த அகங்காரப்பேய் அநேகமாய் அகன்றோடியது. உடனே அவள் காலில் விழுந்து, "தாயே! தவமிக்க மங்கையர்க் கரசே! காட்டில் நான் செய்த ஒன்றை அறிந்தனையே! இச்சக்தியுற எவ்வளவு காலம் நீ யோகாப்பியாசம் செய்திருப்பாய்! அதி ரகஸ்யங்களை அறியும்படியான ஆற்றல் நீ உற்ற விதத்தை அடியேற்கு அறிவித்தருள்க"என வேண்டினன். அதற்கு அவள் "மைந்த! நீ சொல்லும் தவமேனும் யோகமேனும் நான் அற்பமும் அப்பியசித்தவள் அல்லள். நான் ஒருசர்வ சாமான்ய ஸ்திரீயே. உன்னைக் காக்க வைத்தமைக்குக் காரணம், என் நாயகனது சுகக் குறைவே. நீ இங்குற்ற சமயம் அவர்க்குச் சிசுருஷை செய்துகொண்டிருந்தேன். இங்ஙனம் செய்ய வேண்டியது என்கடமை யன்றோ? எனக்கு விவரம் தெரிந்தது முதல் எனக் கேற்பட்டுள்ள கடமைகளை வஞ்சகமின்றி இயற்றி வருகின்றேன்: விவாகம் ஆவதன் முன்னே தநயை ஈன்றோர்க்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்து வந்தேன். விவாகம் ஆனதுமுதல், மனைவி மகிழ்நற்குச் செய்யவேண்டியவற்றைச் செய்து வருகின்றேன். இதுவே யான் செய்துவரும் மகா யோகமும் பெருந்தவமும் ஆகும். இவ் வரும்பெருந்தவத்தால்தான் எனது அகஇருள் நீங்கி அறிவொளி விளக்கம் பெற்றேன். காட்டில் நீ காக்கையையும் கொக்கையும எரித்ததை, கண்டவள்போற் கூறக் காரணமா யிருந்ததுவும் இதுவே. பிள்ளாய்! நீ இன்னும் பரிபக்குவ நிலை அடைந்திலை. அதற்குள் அவசரப்பட்டு அகங்காரம் மேற்கொண்டனை. சாஸ்திர விசாரணையும், தக்கஅநுபவமும், சாதுசங்கப் பழக்கமும் இருந்தா லொழிய மெய்ப்பொருளறிய எவராலும் ஒண்ணாது. நான்உனக்கு இப்பொழுது அறிவித்ததினும், அதிகம்அறிய நீ ஆவல் கொண்டால், ஒரு காரியம் செய்: மிதுலாபுரியில், கடைத்

தெருவில், மாமிசம் விற்கு மிடத்தில், தொங்தியும் தொப்பையுமாய், ஒரு கசாப்புக்கடைக்காரன் இருக்கிறான். அவன் ஜாதியில் வேடன். ஆயினும், அவன் தரும சாஸ்திரத்தில் நிபுணன். ஆதலின் அவனைத் "தருமவியாதன்" என்பர். அவனிடத்தில் சென்றால், உனக்குள்ள சந்தேகங்கள் நிவிர்த்தியாகும். அறியாத பல நீதிகளும் அறியலாகும்" என்றாள்.

இது கேட்டதும், அந்தணன் திடுக்கிட்டான். "நான் என் ஊரை விட்டு ஊர்போகவேண்டும்? அதுவும் கேவலம் கசாப்புக்கடைக்காரனிடம்? கசாப்புக் கடைக்காரர்கள் பரம சண்டாளர்கள். சண்டாளர்களிடமா தருமோபதேசம் கேட்பது?" என்ற எண்ணம் அவனுக்கு முதலில் உண்டாயிற்று. ஆயினும் விசிஷ்டாபுரியில் நிகழ்ந்த அதி அற்புதமான விஷயத்தை உத்தமி வாய்மூலம் உணர்ந்தவனாதலின் "மிதுலைக்குப்போய் அங்கு நிகழும் வேடிக்கையும் பார்ப்போமே" என்ற எண்ணம் அந்தணனுக் குண்டாயிற்று. உண்டாகவே, அவன் மிதுலாபுரிக்குச் சென்று குறித்த கடைத்தெருவிற் புகுந்து அதி தூரத்தி லிருந்தபடியே மாமிசங்களை அறுத்துக் கொண்டும், வெட்டிக் கொண்டும், கொத்திக் கொண்டும், விலை கூறிக்கொண்டும், விற்றுக்கொண்டும் இருந்த தருமவியாதனைக் கண்டான். கண்டவுடன் அவன் மனந் திடுக்கிட்டது. "கடவுளே! இந்தப் பாவத்திற் கென்ன செய்வேன்!. ஈனத் தொழில் புரியும் இவ் எமஸ்வரூபியினிடமா நான் தருமோபதேசம் கேட்பது? தருமமும்வேண்டாம்; உபதேசமும் வேண்டாம்." என்று தனக்குள் அருவருத்து உரைத்துக்கொண் டிருக்கும்போதே, "ஸ்வாமி! "இன்ன நகரிலுள்ள இன்ன உத்தமியால் அனுப்பப்பட்டவர்களன்றோ தாங்கள்? (ஒரு இடத்தைக் காட்டி) தயை செய்து இங்கு உட்கார்ந்திருங்கள். என் வேலை முடிந்ததும் வந்து விடுகிறேன்" என்றான் வேடன்.

சந்நியாசிக்குண்டான ஆச்சரியத்திற் களவில்லை. 'என்ன தான் நடக்கிறது பார்ப்போம்' என்று உட்கார்ந்தான். வேடன் தன்வேலையாவும் முடிந்தவுடன் கிடைத்த பணத்தையெல்லாம் திரட்டிக் கொண்டு, அந்தணனிருக்குமிடம்வந்து, "ஐயா! வாரும். வீட்டிற்குப் போவோம்" என்றான். அந்தணனும் வாய்திறவாது அவனுடன் சென்றான். இருவரும் வீடுற்றதும், வேடன் வேதியனுக்கோ ராசன மளித்து,

"ஐயா! சற்றுப் பொறும். வருகின்றேன்" என்றுகூறி உள்ளே சென்றான். சென்றதும், தனது வயோதிகத் தாய் தந்தையரை நீராட்டி அவர்கட்கு வேண்டிய சௌகரியங்களெல்லாம்,குறைவறச் செய்தானதும், சந்நியாசியிடம் திரும்பி வந்து, "ஐயா! அடியேனை லக்ஷ்யம் செய்து இவ்வளவு தூரம்வந்ததென்ன?" அடியேனால் ஆகவேண்டிய தேதாயினும் உளதாயின் அறிவித்தருள்க" என்றான். பிராமணன் கடவுளைப் பற்றியும் ஆன்மாவைப் பற்றியும், சில கேட்க,அவன் அதி அற்புதமானஓர் மஹோபந்யாசமாரி பொழிந்தான். இதுவே "வியாதகீதை" எனப்படும். இது ஒருபரம வேதாந்த நூல்.பகவத் கீதையை வாசித்த அனைவரும் வாசித்துணர வேண்டியதாகும் இவ் வியாத கீதை.

கசாப்புக் கடைக்காரனுடைய அறிவுமிக்க கர்ணமிர்தக் கட்டுரையைக்கேட்டு அதியாச்சரியமும், ஆனந்தமுங் கொண்ட அந்தணன்,அவனை நோக்கி, "ஐயா! நீ வாக்கினால் ஓர் தெய்விகபுருஷனாகவே விளங்குகின்றாய். ஈனமும் இழிவும் மிக்க கொலையும் மாமிசவிக்கிரயமும் செய்ய எப்படி உன்மனம் இசைந்தது? உனது அறிவென்ன? செய்கை என்ன? எனக்கொன்றும் விளங்க வில்லையே—" என்றான். அதற்கு வேடன், "வேதியரே! விருப்புறத்தக்க உயர்ந்த தொழில் என்பதும், வெறுப்புறத்தக்க இழிந்த தொழில் என்பதும் இல்லை. உள்ளபடியே,

"உயர்வும் இழிவும் உறுவதிலை மாந்தர்
பயிலும் பதவியின் பண்பால்—செயிரறநின்
செய்கடனை நன்றாகச் செய்திடுக. மற்றிதில்தான்
எய்துமுயர் வுள்ளதென்றே எண்."

என்குலத்திற் கேற்பட்ட தொழில் இது.இதைத் தவறாமல் செய்து வருகின்றேன்.அன்றியும் பெற்றோர்க்குரிய கடமைகளைப் பிறழாது பேணி வருகின்றேன்.எனக்கு உம்முடைய யோகம் இன்ன தென்று தெரியாது. நான் உம்மைப்போன்ற துறவியு மில்லை. நாடு நீங்கிக் காடு சென்றவனுமில்லை.மகன் தந்தைக் காற்றும் கடமையைச்செய்து வருவதாலேயே யோகாப்பியாசம் பன்னெடுநாள் செய்த உம்மிலும் அபூர்வசக்தி வாய்ந்தவனாயினேன்" என்றான். உடனே பிரமசாரி வெட்கமுற்றுத் தான் காப்பாற்றாது பரிதவிக்க விட்டுவந்த வயோதிகரான தன் ஏழைப் பெற்றோரை ரக்ஷிக்கச் சென்றான்.

(இன்னும் வரும்)

பத்திராதிபர்.

சாணக்கிய ஸாஹஸம் என்னும்

சந்திரகுப்த சரித்திரம்.

பத்தாவது அத்தியாயம்.

உடன் கட்டையேறல்.

அப்பொழுது நகர மக்களால் வாரி யிறைக்கப்படும் மஞ்சள் குங்குமம் புஷ்பம் இவைகளாலும், தூளிகளாலும், சூரியப்பிரகாசம் மறைந்ததானது, "இதுவரையிலும் அந்தப்புரம் விட்டு வெளிவாராத இந்த ராஜஸ்திரீகள் இப்பொழுதுதெருவில் சகலருங்காணும்படிக் கால்நடையாக வருவதைக்கண்டு சகியாது, சூரியன் மறைந்து விட்டானோ" என்று சொல்லும்படியாக இருந்தது. எழுந்த பற்பல புகைப்படலங்களால் எங்கும் இருள் மூடிற்று. ஸ்திரீ புருஷர்களின் கண்ணீர்ப் பெருக்கினால் வீதிகளெல்லாம் சேறாயின. அறுந்தெறிந்து வாரி யிறைக்கப்படும் நாநா மணிகள் பதித்த,ஆபரண காந்திகளாகிற இந்திரவில்லாலும், கண்ணீர்ப் பெருக்காகிற நீர்த் திவலைகளாலும், அடிக்கடி அலறுவதான இடிச்சப்தங்களாலும், தேஹகாந்தியாகிற மின்னலொளியாலும், அச்சமயம் மழைக்காலத்துக் கொப்பாகவே இருந்தது.

இவ்விதமாக எல்லோரும் கங்கைக் கரையி லிருக்கும் உத்தியான வனம் சென்று, அங்கு, இடிவிழுந்த அதிர்ச்சியால் உதிர்ந்து கிடக்கும் பழக்குலைகள்போலும், காட்டானைகளால் பிய்த்தெறியப் பட்ட தாமரைப் புஷ்பங்கள் போலும், ஆகாயத்திலிருந்து உதிர்ந்து விழும் நக்ஷத்திரங்கள் போலும், குண்டலங்களால் அலங்கரிக்கப் பட்ட காதுகளுடனும்,சுகந்தங்கள் பூசிய கழுத்துடனும்,அவிழ்ந்து புரளும் சிகையுடனும், அரைக்கண் மூடிச் சுகபரவசத்தில் ஆழ்ந்தவர்கள் போல் முக காந்தி குறையாது இருக்கும் தமது பதிகளின் தலைகளைக் கண்டதும்; பருவதத்தி னுச்சியி லிருந்து உருண்டு விழுபவர்கள் போல் நந்தபத்தினிகள் தரையில் வீழ்ந்து மூர்ச்சித்தார்கள். சற்றுநேரம் கழித்துப் பிரக்ஞை வந்ததும், தங்கள் தங்கள் புருஷர்களின் சிரங்களைத் தம் மார்பில் வைத்துக்கொண்டு அடிக்கடி முத்தமிட்டு "ஸ்வாமி", "நாதா"வென்று தம் கண்ணீர்ப் பெருக்கினால் அபிஷேகம் செய்து துக்கசாகரத்தில் அழுந்திச் சித்தப் பிரமை கொண்டோர் போல் அச்சம் நாணமாதிய நீங்கிப் பிரலாபித்தார்கள்,

"ஹா! ரமணா! ஏன் என்னுடன் பேசவில்லை? என்னிடத்தி லும் உமக்குக் கோபமுண்டானதன் காரணம் என்ன? நான்செய்த குற்றம் இன்னதென்று சொல்லக் கூடாதோ? நீர் இவ்விதம் மௌனமா யிருந்தால் நான் பொறுப்பேனோ" என்று புலம்பினள் ஒரு பூவை.

பதியின் அங்கத்தில் ஐக்கிய மடைந்தவள்போல் சற்றுநேரம் பேசாதிருந்து, பிறகு கைகளைக் கூப்பிக் கொண்டு, "பிராணநாதா! நீர் ஒரு வார்த்தை கூடப் பேசாதிருப்பது நீதியோ? என்மீதுற்ற வாஞ்சையின் நியாய மிதுவோ? அல்லது போக ஸ்திரீயி னிடத்தி லுள்ள வாஞ்சையின் நீதியோ? என்று அரற்றினள் ஓர் அரிவை.

"ஹா! காந்தா! எவ்வளவு விதமாய்ப் பிரலாபித்தும், மன்றாடி யும், ஏன் கண்திறந்து பார்க்கவில்லை? உமது ஹிருதயமேன் இவ்வளவு கல்லாயிற்று? என்னை அரைநாழிகையும் பிரியாமலிருந்த நீர் இப்பொழுது கண்ணை மூடிக்கொண்டு வாய்திறவா திருக்கக் காரண மென்ன? ஐயையோ தெய்வமே! ஆ விதியே!" என்று கதறினள் ஓர் காரிகை.

"புஷ்ப சயனத்தின்மீது படுத்துறங்கும் உமக்கு இந்தக்கல்லி லும் முள்ளிலும் இருக்க விதியோ?" என்றுதன் முன்றானையால் முகத்தைத் துடைத்துத் தலையை மடிமீது வைத்துக்கொண்டு, "ஆஹா அஸஹாய சூரரான பிராணேசா! நீர் இறந்துவிட்டது நிஜந்தானோ? இதென்ன ஆச்சரியம்! ஆஹா! மன்னாதி மன்னனான உமக்கு இந்தத் துர்த்திசையும் ஏற்படுமோ? என்று ஏங்கித் தவித்தனள் ஓர் ஏந்திழை.

"வீர லட்சுமியே! இனி நீ யாரை யடைவாய்? சாஸ்திரவித்தையே! நீ எங்களைப்போல் நீயும் நாயகனை இழந்துவிட்டனையே? ஹா க்ஷத்திரிய தர்மமே! ஆதாரமற்று விட்டாயே? ஹா வனதேவதைகளே! எங்களுக்கு மங்கிலிய பிட்சை அளிக்கக் கூடாதோ?" என்று அழுது தவித்தனள் ஓர் அங்கனை.

"தாயே! பாகீரதி! எங்கள் தாபத்தை நீயாவது தணிக்கக் கூடாதா? ஹா! விப்ர சிரேஷ்டர்களே! உங்களுடைய ஆசீர்வாதங் களும் வீணாய் விட்டனவே. சுமங்கலியப் பெண்டுகாள்! எங்கள்

கப்பட்ட கிளிகளையும் மயூரங்களையும் இனி யார் வளர்ப்பார்கள்" என்று மனம் புழுங்கினள் ஒரு பூங்கொடி.

"நாயகன் வருவதற்கு சற்றுத் தாமதமாகில், ஆபரணங்களை வாரி யெறிந்து அலங்காரங்களைக் கலைத்துக் கோபத்துடன் சயனக் கிருஹத்தில் படுத்து விடுவாயே!" என்று பரிந்தனள் ஓர் பாவை.

"எவ்விதமாக அலங்கரித்தாலும், குற்றம் குறைகள் சொல்லி நிலைக்கண்ணாடியின் கீழ் நின்று கொண்டிருப்பாயே! இனி அக் கண்ணாடியை யார் பார்ப்பார்கள்" என்று கதறினாள் ஒரு காரிகை.

"சயன கிருஹத்தில் நாயகன் எவ்வளவு நய வார்த்தைகளை உரைக்கினும் ஸமாதான மடையாது நீ பிடிவாதம் செய்வதையும், அரசன் உன் காலில் விழுந்து நல்ல வார்த்தை கூறி ஸந்தோஷப் படுத்துவதையும் கண்டிருந்த என்கண்ணால் இந்தப் பரிதாபத்தைக் கண்டு எப்படிச் சகிப்பேன்" என்று தவித்தனள் ஒரு தையல்.

"இருந்த வரையில் உன்னை லக்ஷியம் செய்யாது, போக ஸ்திரீயுடன் உன்நாயகன் சுகித்ததுபோலவே, இப்பொழுதும் வீரசுவர்க்கம் அடைந்து ரம்பாதி ஸ்திரீகளுடன் சுகித்துக் கொண் டிருக்கிறானே" என்று நொந்தனள் ஒரு நுண்ணிடை.

"உனது பூந்தோட்டத்தில் உன்னால் பயிராக்கப்பட்ட ஜாதி மல்லிகை பூவிடும் ஸமய மாயிற்றே! அசோக விருக்ஷத்திற்கு உதை கொடுக்கும் ஸமயமுமாயிற்றே" என்று அரற்றினள் ஒரு அங்கனை.

"அம்மா! மாலினியே! தூங்கி யெழுந்ததும், மாமன் மாமிகளை நமஸ்கரித்து ஆசீர்வாதம் பெற்றதெல்லாம் வீணாய்ப் போய் விட்டதே! நீசெய்துவந்த சுமங்கலி பூஜைகளெல்லாம் பலனளிக்க இல்லையே! ஆரம்பித்திருந்த லக்ஷ்மி விரதமும் இன்னும் ஸம்பூர்ணமாகவில்லையே" என்று உயங்கினள் ஓர் உத்தமி.

"நீங்கள் எல்லோரும் ஸஹகமனம் செய்தபின் நாங்கள் எங்குச் செல்வோம்? யாரை அடுப்போம்? எவ்விதம் ஜீவிப்போம்? எங்ஙனம் ஸஹிப்போம்? எவ்விடம் நிலைப்போம்?" என்று பிரலாபித்தனள் ஒரு பேதை.

இவ்விதம் நெடுநேரம் பிரலாபித்தபின் ஜேஷ்ட நந்தபத்தினி தனது ஸகோதரிகளைப் பார்த்து "அன்புள்ள தங்கைமார்களே! உயிரை வெறுத்து இங்கு வந்தபின் வீணாகப் புலம்பி அழுவதில்

பயனென்ன? மறு உலகெய்திய நம் நாயகர்கள் நம்மைக் காணாது கஷ்டப் படுவார்கள். நமக்கிதோ ஆகாயத்தில் விமானங்கள் தயாராக இருக்கின்றன; சீக்கிரம் எழுந்திருங்கள். கங்காநதியில் ஸ்நானம் செய்வோமாகில் பாகீரதி நமது தாபத்தை தணிப்பதில்தடையில்லை" என்றுகூறி எல்லோரையும் அழைத்துக் கொண்டுபோய் அவர்களுடன் கங்காதீரம் சென்று நதியில் ஸ்நானம் செய்தனள். பிறகு யாவரும் தத்தம் ஆருயிர்க் கொழுனரது சிரங்களைக் கங்கா ஜலத்தில் முழுக்காட்டிக் கரை வந்தனர்.

அச்சமயத்தில் நந்தர்களின் போக ஸ்திரீகளெல்லாம் கூட்டமாய் வந்து அவர்களை நமஸ்கரித்து "தமக்கைமார்களே! எங்களுக்கும் ஸ்நானமாய் விட்டது. நாங்களும் உங்களுடனேயே வருவோம். இதற்கு ஸம்மதித்துத் தயை புரிய வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள்.

அப்பொழுது விதர்ப்ப ராஜகுமாரி அவர்களை நோக்கிப் "பேதைகாள்! ஸஹகமனமென்பது தர்ம பத்தினிகளுக் கன்றி மற்றவர்களுக்கில்லை. நீங்கள் எங்கள்நாயகரது பிரிவாற்றாது அவ்விதம் செய்தால், அது துர் மரணமாகுமேயன்றி நற்கதி யளிக்க மாட்டாது. ஆகையால் பதியைத்தியானித்துக் கொண்டு இக்கர்ம பூமியின் வாசத்தைத் தொலையுங்கள். மஹா குணசாலியான சந்திரகுப்தன் உங்களைப் பெற்றதாயினும் அதிகமாக மதித்து ஆதரிக்கத் தவற மாட்டான். நீங்களும் அவனிடம் புத்திரவாஞ்சையுடனிருந்து முடிவில் நற்கதி யடையலாம்." என்று கட்டளையிட்டு அவர்களை நிறுத்தினாள், உடனே நந்த ஸ்திரீகள் ஞானிகளான பிராமணோத்தமர்களுக்கு மஹா தானமாக லக்ஷக்கணக்கான திரவியங்களை ஈசுவரார்ப்பணமாக அளித்து, அநேக விப்ர தம்பதிகளை ஆடை ஆபரணங்களால் அலங்கரித்து அவர்களுக்குப் பூசை செய்து, வாகனாதிகள் அளித்தனர். பிறகு விருத்த அரசரின் உத்தரவுப்படி அங்கு வந்து அச்சமயத்திற்குரிய கிரியைகளை நடத்தும் புரோகிதர்களுக்குப் பொன் அளித்து, லக்ஷக்கணக்கான கோக்களைக் கன்றுகளுடன் தானம் செய்தனர். ஏழை எளியவர்களுக்கு ஆபரணங்கள் வஸ்திரங்களாதியன ஈந்தனர். அநந்தரம் கங்கா தேவியைப் பூஜித்து சகல தேவதைகளையும் தியானித்து, நமஸ்கரித்து விருத்த ராஜதம்

பதிகளை மனதினால் தொழுது இஷ்டதேவதைகளை வணங்கி, தம் பிராணேசர்களின் இணையடிகளை இருதயத்தில் நிலைநிறுத்தி, அவர்கள் சிரசைக் கையாலெடுத்துக் கொண்டு, அகில் சந்தனக் கட்டைகளாலும் சுகந்த திரவியங்களாலும் ஜ்வலித்துச் சுடர் விட்டெரியும் அக்கினி குண்டத்தைப் பிரதக்ஷிணம் செய்து, அவைகளிலுள்ள சிதைகளில் படுத்துத் தங்கள் பதியின் சிரங்களை ஹிருதயத்தில் வைத்து "சிவ சிவா! ஹரி! ஹரீ! முகுந்த! கோவிந்த! நாராயணா! வாஸுதேவா!" என்று ஹரி ஹரத் தியானம் செய்து கொண்டிருந்தனர். அப்பொழுது அக்கினி பகவான் பிரதக்ஷிணமாய் ஆவரித்து ஜ்வலிக்கலாயினன்.

அச்சமயம் அக்கினிக்கிடும் ஆஹுதியே போலும், காட்டுத் தீயில் வாடும் பூங்கொடிகள் போலவும், சூரிய கிரணத்தில் மறையும் நக்ஷத்திரங்கள் போலவும் நந்த பத்தினிகள் தமது சரீரத்தை அக்கினிக் கர்ப்பணம் செய்து நற்கதியடைந்தார்கள். ஜனங்களெல்லோரும் "ஜய ஜய" வென்று ஒலித்து "இவர்களே உத்தமிகள்! இவர்களே பதிவிரதைகள்! இவர்களே ஸஹகமனம் செய்து நற்கதியடைந்த புண்ணியசாலிகள்!" என்று அவ் அக்கினி குண்டங்களைப்பிரதக்ஷிணம் செய்து நகருக்குத் திரும்பினார்கள். பாகுராயணன் முதலியவர்களும் அநேகருக்குப் பூரி தக்ஷிணைகள் அளித்துக் கங்கையில் ஸ்நானம் செய்து திரும்பினார்கள். பாகுராயணன் அரண்மனை வந்து விருத்த அரசனிடம் எல்லாவற்றையும் தெரிவித்து அவர் உத்தரவுப்படி நந்தர்களுக்கு நற்கதி யுண்டாகும் பொருட்டு லக்ஷக்கணக்காகப் பிராமண போஜனங்கள் நடத்தி, நித்திய தரித்திரம் ஹதமாகும்படி பிராமணர்களுக்கும் பிறர்க்கும் அநேக திரவியங்களை தானம் செய்து, நடத்தவேண்டிய கருமங்களை விமரிசையாக நடத்தினன்.

(இன்னும் வரும்.)

வி. பாலம்மாள்.

ஆத்திசூடி வெண்பா.

(177-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

மன்னன் இறப்ப, மருநீதி யுந்துறப்ப,
நன்னகரம் காண நலம்வறுப்ப,—மன்னர்சிறார்
கௌவையுற, மந்தரைமுன் கற்பித்தாள்; ஆதலினால்
ஔவியமீ பேசே லயல்.

(இ-ள்) மன்னன்-தசரத சக்ரவர்த்தி, இறப்ப-(பழிக்கஞ்சியும் புத்திர சோகத்தாலும்) மாண்டொழியவும், மநுநீதியும்-மநுவினால் விதிக்கப்பட்ட அரசர் நீதியும், துறப்ப-(அச்சூரிய குலத்தினின்றும்) விலகவும், நன்னகரம்-நல்ல வளம் பொருந்திய அரசிருக்கை நகராகிய அயோத்தி, கானு-வனத்திற்குச் சமானமாகி, நலம்-முரசு, கொடிமுதலிய அரச சின்னங்களை, வறப்ப-இழந்ததாகிப் பொலிவு குன்றவும், மன்னர்கிறர்-தசரத சக்ரவர்த்தியின் மக்களான இராம லட்சுமண பரதர் ஆகிய அரசிளங் குமாரர்கள், கேளையுற-(கலக்கத்தை யடைந்து, இராஜசுகங்களையிழந்து மரவுரியும் ஜடைமுடியும் புனைந்து காட்டில் காய் கனி முதலிய தவசிகள் உணவையேயுண்டு பின்னும் எண்ணிறந்த கஷ்டங்களையுமடைந்து) வருந்தற்கேதுவான காரியங்களுறவும், முன்-(ஸ்ரீ ராமனுக்குத் தசரத சக்ரவர்த்தி முடிசூட்டுவா இருந்த) அக்காலத்தில், மந்தரை-கூனி, கற்பித்தாள்-(தன் தலைவியாகிய கைகேசியைக் கணவனிடம் இரண்டுவரங்கள் கேட்கும்படியும் நேரவும் தனை செய்தாள். ஆதலினால்-ஆகையால், (அதை நன்காராய்ந்துணர்ந்தனைக் காத்த யம்-பொறாமையான வார்த்தைகளை நீ-(மனமே) நீ, அய த்து, பேசேல்-ஒருநாளும் பேசாதே.

நோக்கி) ஐய!

தன்னலம் கருதாது, பிறர்நலம் கருதிமந்தரையினால் போகிறேன்?
பொறாமையை யுண்டு பண்ணும் கலகவார்த்தைகளே, இத்
அநர்த்தங்களை யுண்டுபண்ணின வென்னில், தன்னயம் மானத்தையும்
லும் தீயமொழிகள் எத்துணைத் தீங்கை விளைவிக்கக்கூடு பெருமையைக்
வுடையோர் உய்த்துணர்தல் வேண்டும். இதுபற்றி யன்றோழ்வேன்! (ஸ்ரீத
ப்பாற்றினன்?

> பிறர்மறை யின்கட் செவிடாய்த் திறனறிந் நீரசேனன் அய
> எதிலார் இற்கட் குருடனாய்த் தீய றுறிந்தீர்கள்?
> புறங்கூற்றின் மூகையாய் நிற்பானேல் யாதும் ருரு வேலைக்
> அறங்கூற வேண்டா அவர்க்கு.

என்று வற்புறுத்தியதும்.

பொறாமை யென்னும் தீயானது ஒருவன்மனதில் மூளுமேல் உன்னி எவராலும் அவிக்க முடியாது. அது தனக்கு உணவாக, தற்கட் க ஏற்பாடு ர்களின் கீர்த்தியையும், கேட்போரின் செம்மை நன்மைகளையு தருமத்தை வதைத்து, நீதியை யழித்துத் தணிவதன்றி வேறில்லை. னும் சிறந்த சத்துரு இல்லறத்தினுக் கில்லை.

பொறாமையை "மனதிற் கொள்ளாதே" என்றுகூறாமல், "பேசாதேன்? என அருளியதின் நுட்பக்கருத்து ஈண்டு கவனிக்கத் தக்கது. அஃது உன் தெனில், பொறாமையை ஒருவர் கொள்வதால் அவர் சுய நலத்திற்கு பங்க டில் தீமை விளையுமன்றி, பிறருக்கு யாதொரு கெடுதியும் நிகழ்வதற்கில்லை

அன்றியும், செல்வரைக் கண்டு பொறாமை கொள்ளாதிருத்த லொன்றொழிய, கல்வியாலும், ஊக்கத்தாலும், ஒழுக்கத்தாலும், குணத்தாலும் மேம்பாடுடைய பிறரைக் கண்டுழி, அவர்போல் தாமும் அத்தகை உயர்ச்சிகளை யடைய வேண்டுமென நல்லாற்றில் முயல்வதற்கும் பொறாமை முதற் கருவியா யிருத்தலின், அதனைப் பயன் படுத்தும் முறை கருதி, 'ஔவியம் எண்ணேல்' என்றுரையாது, "பேசேல்" எனக் கூறியதாகவும் அறிதல் வேண்டும்.

குந்திமக்கள் ஐவர் பிறந்து வளரும் செய்தி கேட்டு மனம் பொறாது தன் வயற்றி லமைத்திருந்த கருவைப் பின்னப்படக் கற்குழவி கொண்டு இடிக்கும்படி காந்தாரியைச் செய்ததும் இப் பொறாமை தான். இதுவே சுயநலம் கெடுமென்றலுக்குத் தக்க சான்றாம்.

இக்குணம் பெரும்பாலும் மகளிரிடத்தே நிகழ்வ தியல்பாய்க் காண லாம். காரணம்,அவர்கட்கு உலகியற் கல்வி முற்றிலும் பயிற்றப்படாததே யன்றி வேறில்லை. ஆதலின், பெண்கட்கு விரிந்த கல்வி கேள்விகளை விருத்தி செய்தாலன்றி குடும்பங்களில் இக்குணம் தேய்ந்தொழிவ தரிது என்பதும் கொள்ளப்படும்.

அசலாம்பிகையம்மாள்.

கமலாவதி.

அங்கம்—5

காட்சி—2.

வநாட்டு அரமனையிலோர் முற்றம். காலம்,—மாலை.

[கமலாவதி, ஸ்ரீதரன், ஜயகேசரி ஆகிய மூவரும் வருகின்றனர்.]

ச! நான் பிழைத்தது புநர் ஜன்மமாக்கும். கொடூர ானது நய வஞ்சகத்தை, ஆ! ஆ!! நீங்கள் காணவில் ப!

ன சமாசாரம்? அப்பொழுதே கேட்க வேண்டுமென் றெண்ணினேன். அவகாச மேற்படாமற் போயிற்று.

கொடூரசேனனுக்குமுன் திடீரென, என் உடையை,மாற்றி நான் இன்னான் எனக் காட்டிக்கொண்டதும், அவன் திடுக் கிட்டான். நான் அவன் செய்த அக்ரமங்களை ஒன்று விடா மற் கூறினதும், அவன் மகா யோக்கியன்போல் பேசினான். எனக்கு இவன் யோக்கியதை தெரியாதா? ஆயினும் நியாய வழியிலே போக வேண்டுமென்று அவன் கையில் ஒருவாள் கொடுத்து "நீயும் நானும் ஒருகை பார்ப்போம். தருமமே ஜயம். வா சண்டைக்கு" என்றேன். அதற்கு அவன் அன் பொரு வடிவாய் அமர்ந்தவன் போல "ஜயகேசரி! நீ வேண் டுமாயின், என்னைக் கொன்றுவிடு. எனக்கு உன்மீதுள்ள அன்பு ஒருபோதும் மாறாது" என்று சொல்லிக்கொண்டே திடீரென்று வீசி விட்டான் வாளை என்மீது:

ஸ்ரீ. அப்புறம்

ஜய. அப்புறம் என்ன? நடந்ததெல்லாம் உனக்குத் தெரியுமே. அதற்காகத்தான் நீர் வருவதற்குள்—

[விக்ரமகேதுவும் சத்தியாநந்தரும பரபரப்புடன் பிரவேசிக்கின்றனர்.

விக். (ஆநந்தக் கண்ணீருடன் கமலாவதியைத் தழுவி) கண்ணே இம்மட்டிலாவது உன்னை மறுபடியும் காணக் கொடுத்து வைத்திருந்ததே! பாவி கொடூரசேனன் உன்னை அபகரித்துச் சென்றனே, நீ எவ்வாறு அவனிடமிருந்து தப்பினாய்?

கம. (ஜயகேசரியைக் காண்பித்து) எனக்கு நேர்ந்தும் நேரவும் இருந்த மகத்தான ஆபத்துக்களிலிருந்து என்னைக் காத்தவர் இவரே.

விக். யார்? நம். ஜயகேசரியா? (ஜயகேசரியை நோக்கி) ஜய! நீசெய்த உதவிக்குக் கைம்மாறு யாது செய்யப் போகிறேன்? என் மகளை நீ எவ்வாறு காத்தாய்? அவளது மானத்தையும் உயிரையும் காத்து அதனால் எங்கள் குலப் பெருமையைக் குலையாதிருக்கச் செய்த உன்னை எவ்வாறு புகழ்வேன்! (ஸ்ரீதரனைநோக்கி) ஜயகேசரி எப்படி அவளைக் காப்பாற்றினான்?

ஸ்ரீ. அரசே! இருக்கட்டும். கமலாவதியைக் கொடூரசேனன் அபகரித்துச் சென்றானென்று தாங்கள் எப்படி அறிந்தீர்கள்?

விக். எப்படியா? கொடூரசேனனுக்கு வீரன் என்றொரு வேலைக்காரன் உண்டல்லவா?

ஸ்ரீ. ஆம்.

விக். இவ் வீரனைக் கொடூரசேனன் மாறு வேடத்துடன் உன்னிடம் அனுப்பி, சமயம்பார்த்து உன் உயிரைவாங்க ஏற்பாடு செய்திருந்தானும்.

ஸ்ரீ. அதெல்லாம் எப்படித் தெரிந்தது?

விக்ர. அவசரப்படாதே. சொல்லுகிறேன். என்ன சொன்னேன்? (யோசித்து) ஆம்! வீரனைஅனுப்பி யிருந்தானு? அவன் உன்னைத் தேடிக்கொண்டு எங்கெங்கோ சென்றானும். அங்ஙனம் செல்பவனை ஒரு காட்டில் தற்செயலாய் இவர் (சத்தியாநந்தரைச் சுட்டி)கண்டார். இருவரும் சம்பாஷிக்க நேர்ந்தபோது அவன் ஏதோ தியங்கித் தியங்கி முன் சொன்னவற்றிற்குப் பின்சொன்னவை விரோதமாக உளறிக் கொட்டினானும். குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கு மன்றோ? நமக்கு நல்லவேளை இருந்ததால் சத்தியாநந்தர்க்கு ஏதோ சமுசயம் பிறந்தது. பிறக்கவே, அவனைச் சிறைப்படுத்தி என்

முன் கொண்டு வந்து நிறுத்தினர். அவனுடைய வரலாறு கூறுமாறு எவ்வளவோ நயமாகக்கேட்டோம். உறுக்கியும் கேட்டோம். பக்காப் பேர்வழி—உண்மை உரைத்தானில்லை.

ஸ்ரீ. அப்புறம்?

ல விக்ர. அப்புறம் என்ன? “மயிலே! மயிலே! இறகு போடு” என்
யன் றால் போடுமா? அடி பொறுக்க மாட்டாமல் உள்ளது உள்
விரு ளபடியே ஒன்றும் விடாது உரைத்து விட்டான்.
என்ட். (ஆச்சரியத்துடன்) அப்படியா?

(ஸ்ரீதரனை நோக்கி, ஆத்திரத்துடன்) அரசே! பார்த்தீர்களா? நான் சொன்னேனே. நம்பினீர்களா?

ஜயகேசரி! என்னை யென்ன செய்யச் சொல்கிறாய்? கண்ணாறப் பாராமல் ஒருவன் மேல் கள்ளம் எங்ஙனம் நினைக்கிறதென்றிருந்தேன். நீதான் சொல்லியிருக்கிறாயோ. இல்லையோ எனக்கு “வெளுத்ததெல்லாம் பால் கறுத்ததெல்லாம் தண்ணீ”ரென்று. (விக்ரமகேதுவைப் பார்த்து) இந்த ஜயகேசரி எனக்காகவும், தங்கள் புதல்விக்காகவும் பட்ட சிரமம் இவ்வளவவ்வளவில்லை. கொடூரசேனனுடைய செய்கைகளை நேரிலும் ஆள் விடுத்தும் கவனித்தும் அனுமானித்தும், விசாரித்தறிந்தும் அப்போதைக் கப்போது எனக்கு எவ்வளவோ சொல்லி எச்சரித்து வந்தும், நான் நம்பாதன்றோ இருந்தேன்!. கமலாவதியைக் கொடூரசேனன் சிறை செய்த செய்தி அறிந்ததும் செய்த அகடவிகட சாமர்த்திய துணிகரச் செய்கைகளைக் கேளுங்கள். மந்திரவாதி யுடையுடன் சென்று, தன் வாக்குச் சாதுரியத்தால் கொடூரசேனனுக்கு நம்பிக்கை வரச்செய்து, நேரிய வழியிலேயே கமலாவதியை மீட்க முயன்றான். இங்ஙனம் செய்ததில் மயிரிழை தப்பிற்றும் ஜயகேசரியின் பிராணனே போக. ஆ! ஆ!! கொடூரசேனன் அச்சமயம்செய்த நயவஞ்சகத்தைப் பற்றி என்னிடம் கூற ஆரம்பிக்கும் சமயத்தில் தாங்கள் வந்து விட்டீர்கள். ஜயகேசரி சொன்ன மாதிரியிலிருந்து, கொடூரசேனன் சாகாதிருந்திருப்பானாயின் ஜயகேசரியை இப்பொழுது உயிருடன் கண்டிருக்க மாட்டோம்என்று தெரிகிறது. அரசே! அவனது பெருந்தன்மை, தன்னல மறுப்பு, தைரியம் முதலியவற்றை எவ்வளவு கூறினும் முற்றும் கூறிவிட்டதாய் அவனை யறிந்த எவராலும் நினைக்க முடியாது. ஆயினும் சாவகாசமாய் அவனைப் பற்றிச் சொல்லித் தீரவேண்டிய சில முக்கிய விஷயங்கள் உள. நாழிகை வெகுவாய் ஆய் விட்டது. நீண்ட பிரயாணத்தால் தாங்களும் களைப்படைந்திருக்கிறீர்கள். ஆகையால் சிரம பரிகாரம் செய்து

கொண்டு போஜனம் முடிந்தவுடன் பிறவிஷயங்களைப் பேசிக் கொள்வோம்.

விக். உண்மையே. சிறிது சிரமமாகத் தானிருக்கிறது. என்றுலும்; சந்தோஷ சமாசாரங்களைக் கேட்குந்தோறும் சிரமமே தெரியவில்லை. ஆயினும் விவரமாக ஜயகேசரி வாய் மூலமாகவே மற்றுமொருமுறை முழு விவரமும் கேட்டறிய ஆவலாய் இருப்பதால் இப்பொழுது செல்வோம். ஜயகேசரி! நாளைக்காலை 9 மணிக்கு இங்கு நாங்கள் உன்னைப் பார்க்கலாமல்லவா?

ஜய: என்ன இப்படிச் சொல்லுகிறீர்கள்? அதைவிட எனக்கு வேறு வேலை என்ன? உத்தரவு வாங்கிக் கொள்ளுகிறேன். (போகிறன்)

(எல்லாரும் போகிறார்கள்)

(காட்சி முடிகிறது)

K. வேங்கடராமையர்.

மூவர்க்கும் கூறும் மொழி.

ஆவி உடல்பொருளென் றுயஇவை இந்தியர்க்கே
மேவி அளித்துதவு மேன்மைமிகு—மூவர்களாம்
அன்னை பிசண்ட்!வாடி யா!அரண்டேல்! ஆகியநீர்
முன்னிய சித்திக்க முற்றிர்ந்து. (க)

(முன்னிய—கருதிய நற்காரியங்கள்)

எந்தாய்நா டெய்துதுயர் எல்லாம் இனிதொழிக்க
வந்தாய்!நின் இந்தியர்கள் வாழ்வுபெறத்—தந்தாய்! எம்
அன்னைபிசண் டம்மே!நிற் காம்பர்ந்தத் தால்இந்திய
அன்னைபிசண் டம்வருந்தா தாரே (உ)

(இந்திய அன்னை பிசண்டம்—பாரத மாதாவின் திருவயிறு.)

கோடானு கோடி சொடுப்பினும் தன்னுடைநாக்
கோடாச் சிறப்புடைய கொள்கையாய்!—பீடாரும்

வாடியா! நின்னை வறும்பந்தத் துய்த்தாலும்
வாடியா நீபோகுவாய்? (௩)
(நா கோடா—சத்தியம் தவறாத, உய்த்தாலும்—செலுத்தினும்)

தன்னுயிர்போல் மன்னுயிரைத் தாங்கும் தகைமையுளாய்!
இன்மொழியே பூண்ட இயல்பினாய்!—மன்னும்
அரண்டேல்!நீ பந்தம் அடைந்தாலும் என்னே!
அரண்டேநீ போய்விடுவா யா? (௪)
(அரண்டு—அஞ்சி,)

"கருங்கற் சுவர்சூழல் காவலிடம் ஆமோ?
இரும்புக்கம் பிக்கூடும் என்னே?—இருஞ்சிறையோ?
மாசில் மனமும் மனத்தெளிவும் வாய்ந்தவருக்(கு)
ஆசிரமம் ஆகும் அவை." (௫)
(சூழல்—சூழ்ந்தமைந்த இடம், மாசுஇல்—களங்கமற்ற)

"அன்புச் சுதந்திரமும் ஆன்மச் சுதந்திரமும்
ஒன்றப் பெறும்பே(று) உறுவேனேல்—என்றுமுயர்
விண்ணிற் பறக்கும் விபுதரே யன்றி,இந்த
மண்ணிலப்பே(று) உற்றவர்யார் மற்று?" (௬)
(ஒன்ற—சேர்ந்திருக்க, விபுதர்—தேவர்.)

என்னரிச்சர்ட் *லவ்லேஸ் எனும்புலவன் முன்எமக்குச்
சொன்னஉரை தேர்ந்து துயர்அற்றேம்—மன்னியநும்
தந்நயமே எண்ணாத தன்மையினால்,இந்தியர்கள்
தந்நயமே வாழ்க தழைத்து. (௭)

[* Richard Lovelace.]

மெய்த்திருவந் துற்றாலும் வெந்துயர்வந் துற்றாலும்
ஒத்திருக்கும் உள்ளத்(து) ஊரவீர்! நும்—சித்தம்
கலங்காதே என்றைக்கும் கண்ணியநும் செய்கை
விலங்காதே மெய்ந்நெறியை விட்டு. (௮)
(மெய்த்திரு—உண்மையில் லட்சுமி கடாக்ஷம்,உள்ளத்து உரவீர்!—மன வலிமை படைத்தோர்களே! விலங்காது—விலகாது.)

அற்புந்த எங்கட்கா ஆயிரம்பா(டு) எய்திடுநும்
நிர்ப்பந்தம் நீங்கி நியமமுறக்—கற்பந்தான்
சின்னாள் எனும்வண்ணம் சிற்பரன்றன் பேரருளால்
எந்நாளும் வாழ்மின் இனிது. (௯)
(அற்புந்த—அன்புமுன் செலுத்துவதாலே, எங்கட்கா—எங்களுக்காக, நியமம்—ஒழுங்கு, கற்பம்—பிரமன் ஆயுள், சிற்பரன்—கடவுள்)

ம. கோபாலகிருஷ்ணையர்.

ஆத்திசூடி வெண்பாவைப் பற்றிய ஐயங்கள்.

ஸ்ரீமதி அசலாம்பிகையம்மாள் என்னும் நங்கையார் இயற்றிப் பிரகடனஞ் செய்து வரும், வெண்பாவும் உரையும் படித்து வருகின்றேன். படிக்கும்போது எனக்குத் தோன்றிய ஐயங்களை இங்கே எழுதுகின்றேன்.

(1) இதுவும் 'ஆத்திசூடி வெண்பா.' இராம பாரதியார் செய்ததும், 'ஆத்திசூடி வெண்பா' என்றால், இரண்டுக்கும் பேதம் வேண்டாமா? ஒரு விஷயத்திலே எழுந்த இருநூலும் ஒரு பெயரால் வரின், அது இது என் மயக்கம் வாராதோ? திருவள்ளுவர் குறளே பின்னடிகளாக வரும்படி வைத்துப் பாடிய வெண்பா நூல்கள், இரங்கேசர் வெண்பா, வடமலை வெண்பா, தினகர வெண்பா, சிவசிவா வெண்பா, முதுமொழி வெண்பா, எனப் பேதங்காட்டி வரவில்லையா?

(2) இந்நூலின் முதலாஞ் செய்யுளின் முதற்சீர் "நாடிழந்து" என வரலாமோ? மங்கலமொழி வேண்டாவோ? 'தேடி' என்பதற்கு, 'சூரியனை வேண்டி அருந்தவம் புரிந்ததாற் கிடைத்த அக்ஷய பாத்திரம் என்னும் பொற்கிண்ணத்தின் உதவியால்' எனவும், 'யாடி' என்பதற்குப் 'பாராயணஞ் செய்தலால்' எனவும், பொருள் கூறற்குப் பிரமாணம் என்னை? 'பாராயணம்' என்னுஞ் சொல்லின் முடிபும் பொருளும் யாவை?

(3) 'அறஞ்செய விரும்பு' என்பதற்குப் 'பிரிவாற்றாது வந்த பிராமணருக்குப் பிறராற் பெற்ற உணவுகொடுத்தது' உதாரணமாகுமா? 'அறஞ்செய விரும்பு' என்பதை இறுதியாக்காது "என்றமை" என்பதனால் முடித்ததும், வகையுளி செய்ததும் நற்றொடையாகுமா? பாரதியார் எங்ஙனஞ் செய்தார்? 'அறஞ்செய விரும்பு' முதலியன சூத்திரமா? வாக்கியமா? 'சிறுதொடர்நீதி' யென்பதென்னை?

(4) "இருந்து வசித்தல்" "என்னே" "ஒன்றுமட்டில்" முத்திவீடு" "தாளினைத்திறத்தல்" "குறிப்பாம்" "பிரதிகூலம்!" "தவிர" 'வாலியர்" "உட்கொள்ளல்" "ஆகவே" "நாளடைவு" "முதன்மையாவது" என்பவைகளுக்குப் பொருள்கள் யாவை?

(5) இரண்டாம் வெண்பாவிலே, "விஞ்சாமல்" என்பதிலே எதுகை நயம் பெற மூன்றும் எழுத்தொன்றாமையும், யதி வழுத்தோன்ற "தேய்விலதென்(று) ஆதலினால்" என்புழி உகரங்கெடாமையும் கவிக்கழகாகுமா?

(6) 'பஞ்சவரின்' என்புழி, 'இன்' என்பது எப்பொருட்டு? அதற்குப்

'பாண்டவருள்' என்றது என்னை? பாஞ்சாலியை 'யாகபத்தினி' என்று இங்கே கூறியது யாது கருதி? மற்றைக் காலங்களிற் பத்தினியாகாளா?

(7) தேறினன் என்பதற்கு "(தடுக்காமல்) மௌனமாக மன வலியைப் பெற்றிருந்தான்" என்பது இயையுமா? பிரமாணம் யாது? தருமர் கோபம் கொள்ளாமைக்குக் காரணம் பொறுமைக்குத் தேய்வில தென்றா? மெய்ம்மைக்குத் தேய்வில தென்றா?

(8) கோபித்தல் கடமையாவது எப்படி? "என்பதாக" "கசிப்பு" "பாராட்டினால்" "ஏற்படுங்கால்" "பிரதி பலிக்காமலும்" "அணையும்படி" "எதிரிடை" "தலைக்கடமை" "கற்பனை" "சுட்டெரிக்கும்" "தமிழ் மொழி வழக்கில்" என்பவைகளுக்குப் பொருள்கள் என்னை?

கே. எஸ். நீலாயதாக்ஷி,
விதுஷி, யாழ்ப்பாணம்.

சோழவந்தானூர் அரசஞ் சண்முகனார் இயற்றிய

வள்ளுவர் நேரிசை.

(168-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

பத்தாவது அதிகாரம்.

இனியவை கூறல்.

தன்னாட்டிற் செம்பாதி சாமமுனிக்(கு) ஈவலென்றோர்
மன்னாட்டல் இன்சொலலோ? வள்ளுவரே!—முன் னாட்டின்
இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல் (க)

(அ—ம் முதலியன):—செம்பாதி—சரிபாதி, சாமமுனிக்கு— சமாதானமே விரும்பிய துரோணனுக்கு, ஈவல்—கொடுப்பேன், மன்—துருபத மன்னன், நாட்டல்—உறுதிமொழிகூறினமை, முன்—சிறப்பாக, நாட்டின்—சொல்லுமிடத்து, ஈரம்—அன்பு(டன்), அளைஇ—கலந்து படிறுஇலவாம்—வஞ்சகம் இல்லாதனவாகிய, செம்பொருள்—அறத்தினை, கண்டார்—அறிந்தவர்களது. 'இன்சொலால்' என்பதில் 'ஆல்' என்பது அசை.

பாதிராஜ்யம் தருவதாகத் துரோணருக்குத் துருபதன் கூறிய வரலாற்றை "வள்ளுவர் நேரிசை, ஒன்பதாவது அதிகாரம், 10-வது செய்யுளை விளக்கக் கூறிய விஷயங் கொண்டு அறிக.

முன்(பு)அரா வான்இன் சொல் மொழிந்து களப்பலிக்கு
மன்பால் உடன்பட்டான் வள்ளுவமே!—இன்பால்
அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்.

(அ—ம் முதலியன):—மன்பால்-துர்யோதன மன்னனிடம், இன்பால்-இன்பமுடன்; அகன்அமர்ந்து-மனமகிழ்ந்து, முகன் அமர்ந்து-முகம் மலர்ந்து.

அராவான் இன்சொல் மொழிந்து துரியோதனன்பால் களப்பலிக்கு உடன்பட்டது:—பாரதயுத்தம் ஆரம்பிக்குமுன் பீஷ்மர் துர்யோதனனை நோக்கி, "நீ காலந்தாழாது சில முக்கிய காரியங்கள் செய்யவேண்டும். 'நாள் செய்வது நல்லோர் செய்யார்' ஆதலின் ஒரு நன்முகூர்த்தத்தில் யுத்தம் தொடங்க வேண்டும் அன்றியும், எதிர் ரோமக்காரனும், பலசாலியுமான ஒருவனைப் பலிகொடுத்துத் தீரவேண்டும். இவ்விரண்டும் செய்தால் வெற்றி நம்மதே." என்ன துரியோதனன் நன்னாள் குறிக்கப் புரோகிதரை யழைத்து வரவும், எதிர் ரோமக்காரர் யாரென விசாரித்து வரவும், தனது வேலைக்காரர்களுக்குக் கட்டளையிட்டான். அப்போது பீஷ்மர் அவனைத் தடுத்து "நன்னாள் குறிக்கப் போதிய வன்மை புரோகிதர்களுக்கு இராது. சகாதேவன் ஒருவனே இதுசெய்ய வல்லவன். எதிர் ரோமக்காரர்கள் அர்ஜுனன், கிருஷ்ணன், அராவான் ஆகிய மூவர்களே. பஞ்சபாண்டவர்களும் நம் பகைவர்களாதலின் அர்ஜுனனைப் பற்றிக் களபலி சம்பந்தமாக நாம் நினைப்பது தவறு. கிருஷ்ணனோ பலருமறிய பாண்டவர் சகாயனானவன். ஆதலின் அவனும் நமக்குப் பயனற்றவனே. இவர்கள் போக, அராவான் ஒருவன்தான் உளன். ஆதலின் நீஉடனே சகாதேவனிடம்சென்று தர்மபுத்ரன் தலை உருள ஓர் தக்கநாள் குறித்துத் தருமாறும், அராவானிடம் சென்று களப்பலிக்கு உடன்படுமாறும் வேண்டி வருக." என்றார். துரியோதனன் பாட்டனை நோக்கி, "நல்ல யோசனை சொன்னீர்கள்!. பாண்டவர்கள் நம் பகைவராயின், சகாதேவனும் அவர்களில் ஒருவனல்லனோ? ஒளியப்போய் தலையாரி வீட்டிலா ஒளிகிறது! மானங் கெட்டுநான் அவனைக் கேட்டாலும், அவன் உண்மை உரைப்பானோ? நாம் அபஜய முறற்கான நாளை அவன் குறித்துத் தந்து விட்டாலென்ன செய்கிறது?. இது தான் போகட்டும். அராவான் அர்ஜுனன் மகனன்றோ? பகைவன் மகன் நமக்குப் பரிவு கூர்வானோ? பரிகாசத்திற்கிடமன்றோ?" என்றான். பீஷ்மர் அவனது அற்ப புத்திக்காக நகைத்து, "துரியோதனா! சகாதேவனும், அராவானும் நீ எண்ணுகிறபடி வஞ்சகர்களல்லர். சந்திர சூரியர் கதிமாறித் தெற்கு வடக்காய்த் திரிந்தாலும் சகாதேவன் சத்தியம்தவறான். அராவான் யாக்கை நிலையாமையை முற்றுமுணர்ந்த பரமஞானி யாதலின், தன்னைப் பிறர்க்குப் பயன்படுத்த நற்சமயம் எதிர் பார்ப்பவன்." என்று இருவருடைய ஒப்புயர்வற்ற குணங்களையும்கூறி, அவனுடைய சந்தேகங்களைப் பல் வேறு விதமாகத் தீர்த்தார். அதுகேட்டு வணங்காமுடி மன்னன், ஓர் சூத்திர அன்னப்புள் மீதேறி, உபப்பிலாவியத்திற்குச் சென்று சகாதேவனிருப்பிடம் சென்றான். அவனைக் கண்டதும், சகாதேவன் எழுந்து "அண்ணா! வருக! இவ்வகாலத்தில் இவ்வளவு தூரம்,—அதிலும் என்னிடம்—வந்ததேது?" என்று வணங்கிக் கேட்க, துரியன், "தம்பி! உங்களுக்கும் நமக்கும் பகைசேரிட்டபடியால் படைகூட்டி விட்டோமன்றோ? நம் சைனி

யம் குருக்ஷேத்திரம் போய்ச் சேரவும், தருமபுத்திரர் தலையுருளும்படி நாங்கள் ஆயுதம் எடுக்கவும், தக்க வேளைநாள் குறித்துத் தரும்படி வேண்டிக் கொள்ளவே நான் உன்னை நாடிவந்தேன். ஆசை வெட்கமறியாதன்றோ"? என்றான்.

சகாதேவன் அது கேட்டு, "நல்லது அண்ணா" என்றுசொல்லித் துரியோதனனது காலபலம் முதலியவற்றையும், ஜயாபஜயத்தையும் பன்முறை யோசித்து, "அண்ணா! வெற்றியில் உங்கட்கு விருப்ப முளதேல் நாளையன்றைக்கு வரும் பௌர்ணிமை யன்று இரவு ஒன்பது (9) நாழிகைக்கு மேல் குருக்ஷேத்திரத்திற்குச் சேனைகளை அனுப்புங்கள். அப்போதே களப்பலியும் கொடுத்துப் பராசக்தியைப் பூஜித்து ஆயுதமெடுப்பீர்களாயின் தருமபுத்திரர் தலை தப்பாது. இதற்கு யாதொரு சந்தேகமு மில்லை. பிறகு தெய்வசித்த மெப்படியோ?" என்று கூறி உபசரித்து அனுப்பினான்.

சகாதேவனது விடுதியினின்றும் புறப்பட்ட துரியோதனன், அதிசீக்கிரத்தில் அராவான் விடுதி வந்து சேர்ந்தான். அவன் வந்த சமயம், அராவான் யாக்கை நிலையாமையைப் பற்றித் தன் சீடர்களுக்கு மகோபந்நியாசம் செய்து கொண்டிருந்த தருணமாயிருந்தது. மாசுணக் கொடியோன் நிகழ்ந்த யாவையும் ஓர் மறைவிடத்திருந்தே பார்த்தும் கேட்டுக் கொண்டிருந்தான். பிரசங்கமுடிவில் அராவான் "அநித்தியமாகிய சரீரம் பிறர் ஒருவர்க்குப் பயனுறுங்காலம் வந்தால் அதை முழுமனத்துடனும் தியாகம் செய்து விட வேண்டியதே விவேகிகளின் கடமை" எனக்கூறி வாய் மூடு முன், துரியோதனன் அவன் முன் வந்து நின்றான். அராவான் வியப்புற்று அவனை வணங்கி, "ராஜராஜேசா! தாங்கள் இவ் வறியனை நாடி இவ் அகாலத்தில் வந்தகாரணம்யாதோ? என்றுகேட்க, துரியோதனன் "நித்தியப் பொருளுணர் சத்தியசீல! இங்கு நீ பேசிக்கொண்டிருந்த விஷய சம்பந்தமாக உன் உதவி வேண்டியே இங்கு வந்தேன். ஓருயிரைக் காக்கவேனும் உயிர் விடுதல் புண்ணியமென்று நீ சிறிது முன் கூறினை. ஓருயிரன்று. என்னுடைய 21 அக்ரோணியிற் பெரும்பான்மை உய்யவேண்டியிருக்கிறது. இங்ஙனம் உய்ய எதிர் சேனைக்காரர்களைப் பலியிட்டால்தான் முடியுமாம். உன்னையன்றி எனக்கு உபகாரம்செய்யக்கூடிய உத்தமர் எவருமிலர். வருகிற பௌர்ணிமையன்று 9 நாழிகைக்குமேல் யுத்தம் தொடங்குகின்றது. அச்சமயம் நீயே களப்பலியாக உடன்படவேண்டும்" என்றான். அராவான் அகமகிழ்வும், முகமலர்ச்சியுமுற்று, "இவ்வளவுதானா? என் பாக்கியமே பாக்கியம். தந்தாய்! இச்சரீரம் அநித்தியம். நீர் குறிப்பிடும் தினம் வரும்வரை நானுயிரோ டிருப்பேனாயின், நானவசியம் உமது விருப்பை ஈடேற்றுவேன்" என்றான்.

[☞ அராவான் இன்சொல் மொழிந்ததே இங்குக் கூறப்படவேண்டிய விஷயம். ஆயினும், சகாதேவனைப் பற்றியும் இங்குக் கூறியதற்கு, ஒரு காரணம் உண்டு. அஃதென்னவெனில், இனிப் பிறிதோரிடத்தில் நமது ஆசிரியர் சகாதேவனது வரலாறு கூறுகின்றார். அச்சமயும் மீண்டும் ஆரம்பத்திலிருந்து, இப்பொழுது கூறும் விஷயங்களிற் பெரும்பாகம் கூறாமலிருக்கும் பொருட்டே.]

மாதவரைச் சூதால் வருத்தி விருந்தளித்தான்
வாதாவி இஃ(து) அறமோ? வள்ளுவரே!—தீதே.

முகத்தால் அமர்ந்(து) இனிதுநோக்கி அகத்தானும்
இன்சொல் லினதே அறம். (கூ)

(அ—ம் முதலியன):—வருந்தி—வரவழைத்து, முகத்தால் அமர்ந்து-முக மலர்ச்சியுடன், அகத்தான் ஆம்—மனத்துடனாகிய

மாதவரைச் சூதால் வருந்தி வாதாவி விருந்தளித்தது:—சூரபன்மன் தங்கையாகிய அஜமுகி என்பாள் துருவாசமுனிவரை வலியக்கூடி இரு பிள்ளைகளைப் பெற்றனள். இவர்களில் இளையோன் வாதாவி. மூத்தோன் இல்வலன். இல்வலன் முனிவனாகவும், வாதாவி ஆடாகவும் உருக்கொண்டு முனிவர்களை விருந்துக்கு அழைப்பார்களாம். வந்த விருந்தினர்க்கு இல்வலன் ஆட்டுருக்கொண்ட தன் தம்பியைக் கறியாக்கி யுண்பிப்பான். பிறகு அவன் தன் சகோதரனைப் பேர்கூவி அழைத்தலும், ஆட்டுருவுடன், உண்டோர் வயிற்றைக் கிழித்துக் கொண்டு அவன் வெளிவருவன். இவ்விதம் அவ்விருவரும் முனிவர் பலரைக்கொன்று மகிழ்வெய்தி வருகையில், ஒரு நாள் அகஸ்திய முனிவரை இவர்கள் கண்டு, வழக்கப்படி விருந்துக் கழைத்தனர். அகஸ்தியரும் இணங்கி உணவருந்தியபின், இல்வலன் வழக்கப்படி வாதாவியை அழைக்க, அவன் ஆட்டுருவேற்று வயிற்றைக் கிழித்து வெளிவர யத்தனிப்பதை அகஸ்தியர் உணர்ந்து, தம் வயிற்றைத் தடவித் தம் சக்திவிளங்க அவனை ஜீரணம் செய்து விட்டனர்.

நாடு கரந்துறையும் நாளும் நடுவன்சேய்
வாடா(து) இனி(து) உறைந்தான் வள்ளுவரே!—கேடுற்றுத்
துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொல் லவர்க்கு.

(அ—ம் முதலியன):—கரந்து—மறைந்து, நடுவன்சேய்—தரும புத்திரன், துன்புறூஉம்—துன்பத்தை மிகுவிக்கும், இன்சொல்லினதே—இனிய சொற்களைச் சொல்லுதலின் இடத்ததேயாம், துவ்வாமை—வறுமை

☞ தருமபுத்திரன் அக்ஞாத வாசம் செய்த காலத்திலும் வறுமையால் வருந்தாது காலங்கழித்தது மகாபாரதக் கதையால் பிரசித்தம்.

ம. கோ.

சிறுவர்க்காகும் கதைப்பூங்கொத்து.

(188-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கதை—28.

துஷ்டக் குரங்கு.

மகததேசத்தில், விரிஞ்சிபுரம் என்று ஓர் நகரம் உண்டு. அதில் தர்மசர்மா என்ற வணிகன் இருந்தான். அவன் அந் நகரத்திற்கு அருகி லுள்ள காட்டில் ஒரு கோவில் கட்ட ஆரம்பித்தான். ஒருநாள் வேலைக்காரர்கள்

எல்லாரும் வெளியே சாப்பிடச் சென்றிருந்தபொழுது ஒரு குரங்குக் கூட்டம் அங்கு வந்தது. ஒரு குரங்கு கோடரியைத் தூக்கியது. இன்னொன்று ரம்பத்தை எடுத்தது. மற்றொன்று இரண்டாய் பிளக்கப்பட்டு, ஆப்பு அறையுண்டு கிடந்த ஓர் கருங்காலி மரத்தின்மேல் ஏறியது. ஏறியதும், அது இருபிளவுக் குள்ளும் இருந்துகொண்டு, பலமாகஆப்பை அசைத்துப் பிடுங்கியது. பிடுங்கவே பிளவுகள்ஒன்றுசேர்ந்ததால், பாவம்!குரங்கு நசுக்குண்டு இறந்தது.

மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்.

கதை—29.

பார்ப்பனியும் கீரியும்.

சோழதேசத்தில் சுசீலன் என்ற வேதியன் இருந்தான். பிள்ளையில்லாதஅவன் கீரி ஒன்றைப் பிள்ளைபோல வளர்ந்து வந்தான். கொஞ்சகாலத்திற்குப் பிறகு அவன் மனைவி ஒரு குழந்தையைப் பெற்றாள். தரித்திரனுக்குத் தனம் கிடைத்ததுபோல அவன் சந்தோஷமடைந்து கீரியையும், குழந்தையையும், சமமாக வளர்த்து வந்தான். கீரி, குழந்தையைத் தன் சகோதரனாகவே பாவித்து அதற்கு நன்மையையே செய்து வந்தது. ஒருநாள் பிராமணன் வேறு கிராமம் சென்றான். அவன் பத்தினியும், வீட்டு வேலைகளை முடித்து, குழந்தையைத் தொட்டிலில்விட்டு, அதற்குக் கீரியைக் காவலாக வைத்து நீராடச் சென்றாள். கீரி, குழந்தைமீது கண்ணாய் இருந்தபோது தொட்டிற் சங்கிலிவழியாய் ஒரு அரவம்இறங்கினது. தன் ஜன்ம விரோதியைக் கண்டதும் கீரி, அதைத் துண்டு துண்டாய்க் கடித்து எறிந்தது. தன் வீரச்செயலைத் தாய்க்கு அறிவிக்குமாறு அவள் வருகையை எதிர்நோக்கி வாசலில் நின்றது. நீர்க்குடத்துடன் திரும்பிய தாய் ரத்தத்தோடு, கூடிய கீரியைக் கண்டு அது குழந்தையைக் கொன்றுவிட்டதென எண்ணி, அக் குடத்தை அதன் தலையில் போட்டுக் கொன்றாள். ஐயோ! தொட்டிலில் சுகமாகத் தூங்கும் குழந்தையையும், துண்டிக்கப்பட்ட பாம்பையும் கண்டதும் அவள் என்னபாடு பட்டிருப்பாள்.

ஆராயாச் செயல் அனர்த்தமே விளைக்கும்.

கதை—30.

பொருளிழந்த புரந்தரன்.

உச்சயினி நகரில் பத்திரசேனன் என்ற வணிகன் இருந்தான். அவனது செல்வத்திற்கு எல்லையில்லை. அவன் அதிகச் செலவுசெய்யான். அவனுக்குப் புரந்தரன் என்ற புத்திரன் உண்டு. கொஞ்சகாலத்திற் கெல்லாம் பத்திரசேனன் பரமபதம் அடைந்தான். புரந்தரன் தந்தை விட்டுப்போன பொருளைச் செலவு செய்துவந்தான். அதுகண்ட தனதன் என்ற அவனது நண்பன், "நீ வணிகபுத்திரனாயிருந்தும் மகா க்ஷத்திரிய குமாரன்போல் செலவு செய்கிறாய். உன் பிறப்பை எண்ணுகிறாய் இல்லை. வணிகபுத்திரன் தன்னந்தனியனாய் இருந்தபோதிலும் தனம் சேர்க்கவேண்டும். வீண் செலவு செய்யக்கூடாது" என்றான். அதுகேட்ட புரந்தரன் "நீ சொன்னது

சரியல்ல. தான தர்மங்கள் செய்தால் புண்ணியமே உண்டு. பாத்திரம் அறிந்து பிச்சை இடவேண்டும். அதனால் சுவர்க்காதி புண்யலோகங்கள் சித்திக்கும். நாம் அனுபவிக்கும் பிற இன்பங்களால் இகத்திற்கு மட்டுமே சுகம்; அதனாலேயே 'கொடுத்து உண்ட தனமே பயன் பெறத் தக்கது' என்று மகாபாரதத்தில் சொல்லப் பட்டிருக்கிறது." என்றான். தனதன் பதில் ஒன்றும் சொல்லவில்லை. புரந்தரன் செல்வத்தை யெல்லாம் யோசனையின்றிச் செலவிட்டு ஏழையானான். பந்து மித்திராதியர் அவனை லட்சியம் செய்யவில்லை. அவனோடு சேரவும் அவர்களுக்கு மனம் வரவில்லை. அவன் மனம் வருந்தித் "தனம் உள்ள வரைக்கும் தான் பந்துக்களும். சிநேகிதர்களும் என்னை இப்பொழுது கவனிக்கிறார்கள் இல்லை.

"செல்வர்களே பற்பல் சிநேகர் சனைப்பெறுவர்
செல்வர்பா லேஉற்றோர் சேர்ந்திருப்பர்—செல்வர்களே
மிக்க சிறப்புறுவர் மேதக்க பண்டிதரா
இக்கலியில் ஆவர் இனிது"

என்ற நீதியும் உண்மைதான் என்று எண்ணித் தேசாந்தரம் சென்றான்.

(முதற்கோத்து முற்றிற்று)

வி சு. நடராஜன்.

விநோதக்கூற்று.

(1) சுப்பு:—ஏண்டா காலம்பர வல்லே? .

கிட்டு:—ஏனு? இன்னிக்கித் தெவசமோல்லியோ.?

சுப்புவின் பாட்டி:— கத்தேலேபோக. ஆருக்குத் தெவசம்? ஒனக்குத் தெவசம்; ஒங்கப்பனுக்குத் தெவசம்; ஒங்காய்க்குத் தெவசமா யிருக்கத்துமே. எயு வெயக்க மாத்தெ.

(குறிப்பு—இக்கிழவியின் பேர் சின்னி. இவளை 'இன்னி' என்று அழைப்பது வழக்கம். வயது 97-ஆகியும் சாக மனமில்லாள் இவள்)

(2) வீரு:—தெனம் கொளக்கரெலெ ஒக்காந் திருக்கேளே. அடுத்தாத்து சீமாச்சுக்கு நீஞ்சத் தெரியாதே. அவன் கொளத்திலே விழுந்தா என்னடா பண்ணுவே?.

அண்ணு:—என்ன இப்படி கேக்றியே. விழுந்தா குதிப்பேன் தொப்புன்னு. அப்புறம் இருக்கறதெல்லாம் நம்புளுது தானே?

பாலகிருஷ்ணன்.

விடுகதை வினவுக்கு விடை.

மூன்றெழுத்துச் சொல்'நகரி'. முன்எழுத்தின் றேல்'கரி'யாம்
என்றஇரண் டாவதிலே யேல்'நரி'யாம்—மூன்றுவ(து)
இல்லையேல் ஆகு(ம்)'நக'. என்னவிவே கோதயமே!
'சொல்லு'கெனச் சொற்றார்க்குச் சொல்.

வி. இராமசாமி.

சமாசாரக் கொத்து.

புதுவயல் ஞானப் பிரகாச சபை:—இதன் இரண்டாவது வருஷ பூர்த்திக் கொண்டாட்டம், ஆண்டிப்பட்டி ஜமீந்தார் ஸ்ரீ: எம்.வி.டி.பெத்தாச்சி செட்டியார் எம்.ஆர்.ஏ. எஸ் வின் அக்ராஸநத்தின் கீழ் ஆனி ௴ 19, 20௳ களில் வெகு விமரிசையாகக் கொண்டாடப் பட்ட விவரம் வருமாறு:—

19௳ சோமவாரத்தன்று சுமார் 11-மணிக்கு நகரத்தார்கள் ஒருங்கு கூடி அக்கிராசனரின் நல்வரவேற்று,ஆலயதரிசனம் செய்து, சுமார் 12-மணிக்கு அதி அற்புதமாக அலங்கரிக்கப் பட்டிருந்த, சபை கூடும் கொட்டகை புக்கனர். கடவுள் வாழ்த்துப் பண்ணொடு பாடி முடிந்ததும், காரியதரிசியாகிய நடராஜபுரம் ஸ்ரீ சோமசுந்தரம் செட்டியார், அக்ராஸநாதிபதிக்கு வந்தனோபசாரம் கூறினர். பிறகு அச்சபைக் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் சபையின் அறிக்கைப் பத்திரம் வாசித்தனர். அநந்தரம் அக்ராஸநாதிபதி எழுந்து யாவரும் மகிழ சமயோசித விடை கூறி "பணியுமாம் என்றும் பெருமை" என்னும் பொய்யாமொழிக்கிலக்காகி நின்றனர். பின்னர்,கண்டனூரிலுள்ள லால்குடி பிரம ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் சண்டேசுவர நாயனார் சரித்திர தத்துவத்தை அழகாக உபந்யஸித்தனர்.

அன்று மாலை, சுமார் 4 மணிக்குக் கூடிய கூட்டத்தில் வழக்கப்படிக் கடவுள் வாழ்த்தானதும், "கல்விப்பயன்" என்பதைப் பற்றி லெ. சி. முத்துக் கருப்பன் என்ற ஞா. க. மாணவனும், "ஙப்போல் வளை"யைப்பற்றி வலையப்பட்டி வித்வான் ஸ்ரீ திரு. இராமசாமி ஐயங்காரும், 'இராமரும் பரதரும்' என்பதைப்பற்றி (ஆங்கிலத்தில்) ஞா.க.மாணவர்களும் "இல்லற வாழ்க்கை"யைப்பற்றி ஸ்ரீமதி வி.பாலம்மாளும்; 'ஏகாக்ர சித்த'த்தைப்பற்றி ஸ்ரீ வித்வான் ரெ. ராமமூர்த்தி ஐயரும், "செவியுணவு" என்பதைப்பற்றி ஞா.க. மாணவன் அரு.சு.வீரப்பனும், 'நமது கடமை'யைப்பற்றி ஆத்தங்குடி வித்வான் ஸ்ரீ எம். சுப்பராமையரும், எவர் மனதினும் நன்கு பதியப் பிரசங்கித்தனர். (இன்னும் வரும்.)

தூற்றுக்குடி சத்ஜன சபையின் பத்தாவது மகோத்ஸவ வைபவத் தொடர்ச்சி:—18௳ யன்று முடிவுரையாக ஸ்வாமிகள் "சர்வதுக்க நிவர்த்தியும் பரம ஆனந்தப் பிராப்தியும்" எய்த வேண்டுமேல், ஞானம் அடையவேண்டும். அந்த ஞானமுறத் தியானம் இன்னின்ன விதம் செய்தல் வேண்டும்.இத்தியானம் ஈச்வர பூஜையாலன்றிக் கைகூடாது.உடையோர் முதல் வறியோர்வரை யர்வரும் பச்சிலைகொண்டு பகவானை அர்ச்சித்துப் பூஜை செய்யவேண்டியதுகடமை.சாப்பிடும்பொழுதும் ஈச்வரார்ப்பணம் செய்தே சாப்பிட வேண்டும். இங்ஙனம் செய்வதில் இன்னின்ன தத்துவார்த்தங்கள் அடங்கியுள்ளன. இந்த ஈசுவரபூஜை ஒழுக்கமாம் கர்மத்தாலேயே சித்திக்கும்.இக்கர்மம் நிஷ்காமியார்த்தமாகச் செய்ய வேண்டும். ஈசுவரபூஜையும், தியானமும், ஞானமும் சித்தித்து, இறவா இன்பப் பேற்றினை யெய்த வழி இதுவே. பரமநீசத்துவம் பொருந்திய சண்டாளர்களும் சாது தரிசனத்தாலேயே மோட்சத்தை யடையலாம். என்றதற்குச் சான்று "சசிவர்ணனே" யென்றுகூறிச் "சசிவர்ணனது சரிதையையும் அதன் தத்துவார்த்தங்களையும் கூறினர்.

19௳ சோமவாரத்தன்று,ஸ்வாமிகள் முகவுரையாக "ஒருவன் தனக்கு எவ்வண்ணம் தான் இனியனோ, அவ்வண்ணமே, பிறர்க்கும் தான் இனியனாய், தன்னுயிர்போல் மன்னுயிரையும் காத்தல் வேண்டும்.அதற்குத் தயை வேண்டும்" என்று கூறலும், "தயை" என்பதைப்பற்றி, சதாவதானம் ஸ்ரீ

கிருஷ்ணசாமிப் பாவலர் பிரசங்கித்தனர். இப் பிரசங்கத்தில் அவர் தயையே பரரக்ஷணை ஆத்மரக்ஷணைக்கு ஹேது,, என்பது விளங்கக் கூறினர். இஃதானதும், "ரக்ஷித்தல்" என்பதைப்பற்றி களக்காடு பிரம்மஸ்ரீ முத்துசாமி சாஸ்திரிகள் உபந்யஸித்தவுடன், இத்தகைய ரக்ஷணை பெரிய மகத்துக்களால் தான் ஆகும்.இதற்கு ஜகதாசாரிய சுவாமிகளே போதிய சான்றுவர்" என்று உரைத்து, "ஸ்ரீமத்" "சங்கரப்பிரபாவம்" என்பது பற்றி அக்கிராசனம் வகித்த ஸ்வாமிகள் கூறினர்.ஆசாரியஸ்வாமிகளுற்ற மகத் தன்மை யடைவதற்கு மனம் பிரபஞ்ச வியவகாரத்திலிருந்து விடுபட்டுப் பரமாத்மாவினிடஞ் சென்று பழுத்தல்வேண்டும், என்பதை குறிப்பித்தற்கேதுவாய், "மனப்பழுப்பு" என்பதைப் பற்றிக் காரியதரிசி ஸ்ரீ ரா. சங்கரலிங்கம்பிள்ளையும்; இம்மனப்பழுப்பு, கல்வி, ஒழுக்கம் 'கசடறக்கற்றல்' ஆகிய இவற்றால் வருவதாதலின் "கல்வி, ஒழுக்கம்" "கற்ககசடற" என்பனபற்றி இச்சபையின் அங்கத்தினர் ஸ்ரீ பொன்னம்பலம் பிள்ளையும், பிரசங்கித்தனர். "இவர்கள் உரைக்கெல்லாம் சான்று ஹனுமார் என்னும்படி "ஹனுமன் மஹாத்மியம்"பற்றி இச்சபையின் உப-அக்கிராசனாதிபதி ஸ்ரீ ஜகவீரபாண்டிய கவி ராஜரும், 'எத்தகைய கேவலமான நீச ஜாதியில் ஜனித்தபோதிலும், கல்வியும் அதற்குத் தகுந்த ஒழுக்கமும் இருப்பின் மோக்ஷம் அடையலாம்' என்பதை உணர்த்த "நந்தனர் சரித்திரம்" ஸ்ரீ கோ. வடிவேலுசெட்டியாரும் இனிது கூறி, மூன்றுநாள் பிரசங்கங்களின் சாராம்சத்தையும் வெகு சுருக்கமாய்க் கூறினர்.

ஸ்வாமிகள் யாவற்றிற்கும் முடிவுரையாக, எவ்வுயிரிடத்தும் தயையுடையராயிருத்தல் வேண்டும். தயையின்றிப் பர ரக்ஷணை ஆத்ம ரக்ஷணை செய்யமுடியாது. பிறர்க்குற்றவை தமக்குற்றவை யெனப் பாவித்துப் பிறரை ரக்ஷிக்க வேண்டும். ஆத்மரக்ஷணை யென்பது கேவலம் மலமூத்திராதிகள் நிறைந்த ஊத்தைப் பாண்டத்தை நாலுவேளை ஷட்ரஸ வர்க்கங்களுடன் போஜனம் செய்து ரக்ஷித்தலாகாது. பிரபஞ்ச வியவகாரிக புவன போகத்தில் கிடந்துழலாது, பரமாத்மாவோடு பரமாத்மாவாய், ஆனந்த சுத்த நிலையினை யெய்தற்கு வேண்டும் முயற்சிசெய்து, அதன்பால் ஆனந்தம் எய்துவதே ஆத்மா ரக்ஷணம். இத்தகைய ஆத்ம ரக்ஷணைக்கும் பிறர்க்குற்ற துன்பம் நீக்கி இன்பம் அளித்துத் தர்மத்தை ஸ்தாபனம் செய்தற்கும் ஜகதாசாரியரும் ஷண்மத ஸ்தாபகருமாய் விளங்கிய ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதாசாரியாரும் அவர்கள் போன்ற பரமாசாரியாருமே தகுதியுடையோர். இவர்கள் அநேக இடங்களிற் சென்று யதார்த்தத்தை நாட்டினோர். இவர்கள் எய்திய மகத் தன்மைக்கு மனப்பழுப்பும் கல்வியும் அறிவும் ஒழுக்கமும் அவசியம். வானரவர்க்கத்தில் ஜனித்துப் புகழ் மிக்குற்ற ஹனுமாரே போதிய சான்று.நந்தர் பரம நீச ஜாதியிற் பிறந்த போதினும், அவரது நல்லொழுக்கமிக்க பக்தியாலே மோக்ஷ வீடெய்தினர்" என்பதும் பிறவும் ஒன்றோடொன்று தொகுத்து வெகு செவ்விதாக பிரஸ்தாபித்தார்கள். விஜயம் செய்த புருஷோத்தமர்கள் யாவரும் வெகு ஆனந்தத்துடன் சிரவணம் செய்து மகிழ்வெய்தினர். பின்னர் வக்கீலும் உபசாரணைத் தலைவருமாகிய ஸ்ரீ குமாரசாமிபிள்ளை சபாநாயகருக்கும், பிரசாரகர்களுக்கும், விஜயம் செய்த மகாஜனங்களுக்கும், தமிழ் மறை இன்னிசையுட னோதிய, சத்ஜன இந்து வித்தியாசாலை மாணவ மாணவிகளுக்கும், வாழ்த்துக்கூறி, பூமாலை சூட்டி, சபைகூட இடம் தந்த முனிஸிபாலிட்டியாருக்கும், தமது, மனம், வாக்கு, காயம் பொருள் ஆய

இவற்றால் உதவி புரிந்தோர்க்கு நன்றி கூறி, தற்சமயம் நடைபெறும் ஐரோப்பிய மகாயுத்தம் நமக்கு அனுகூலமாக முடியுமாறும், அரச அரசியர் நீடுவாழுமாறும், எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்தனர்.

அநந்தரம் பிரமஸ்ரீ கோ. ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளுக்குப் பாமாலை சூட்டவும், மங்கள வாழ்த்துடன் சபை இனிது நிறைவேறியது.

அனுபவ ஆனந்தி.

புத்தக மதிப்புரை.

திருவள்ளுவர் திருக்குறள் மணக்குடவருரை:—திருக்குறள் என்னும் அரிய தமிழ்வேதத்தை இயற்றியவர் தெய்வப் புலமைத் திருவள்ளுவரென்பதும், அந்நூற்குத் தருமர் முதலிய பதின்மர் உரைகண்டாரென்பதும், அவற்றுள் அதிசிறந்த பரிமேலழகர் உரையொன்றுமே வெளிவந்து ஆன்றோர்களாற் போற்றப்பட்டு வருகின்றதென்பதும், பலரும் நன்கறிந்ததே.

நமது தேசாபிமான சிங்கமாகிய ஸ்ரீமான் வ.உ. சிதம்பரம்பிள்ளையவர்கள் மேற்குறித்த திருக்குறளுக்கு மணக்குடவரிட்ட உரைப் பிரதிகளைப் பரிசோதித்துப் பிழையற அச்சிட்டுவருகிறமுறையில், இப்பொழுது அறத்துப்பால் முற்றும் புத்தகரூபமாக வெளிவந்துள்ளது. இதற்கும் பரிமேலழகருரைப் பதிப்புக்கும் சிற்சில மூலபாடங்களும், உரையும், அதிகாரவடைவும், அதிகாரம் மூலபாடம் இவற்றின் முறைகளும் மாறுபட்டிருக்கின்றன.

பரிமேலழகருரை, சிற்றிலக்கண இலக்கியங்களிற் தேர்ச்சியுற்று ஆசிரியனுதவியைப் பெற்றுப் படிக்கும் பகுதியினர்க்கே நன்கு பயன்படுமியல்பினது. இம்மணக்குடவருரை அவ்வாறின்றிக் கற்பாரனைவர்க்கும் பயன்படத் தக்கது. எளிய நடையில் குறித்தபொருளை விளங்கக் காட்டுமியல்பினதாய்த் தற்காலத்திற்கேற்றவாறு சந்தி பிரித்துப் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது

ஸ்ரீமான் பிள்ளையவர்கள், தம் முகவுரையிற் குறித்தபடி, ஏனைய பொருட்பால் காமத்துப் பால்களையும் விரைவில் அச்சிட்டு வெளியிடுவர்களாகில் தமிழுலகத்துக் கோர்பேருதவி புரிந்தவராவர். இதன்விலை ரூ 1. வேண்டுவோர், சென்னையைச்சார்ந்த பிரம்பூரில், கந்தப்பன் பிள்ளை தெருவிலிருக்கும் அதன் ஆசிரியர்க்கு எழுதிப் பெறுக. —பத்திராதிபர்.

விளம்பரம்.



இனாம்! இனாம்!! இனாம்!!!

அதாவதென்ன?

நேர்த்தியான "இன் வெண்டிக்" வாச். விலை ரூ 3—0—0. இதை வாங்குபவர்க்கு இங்கிதொடாமல் எழுதக்கூடிய பவுன்டன் பேனா 1, பில்லர் 1, கிளிப்பு 1, இங்கி புட்டி 1 இனாம் அளிக்கப்படும். காரண்டி ஒரு வருடம்.

வி. கெ. பென் அண்டு கோ,
24, விநாயக மேஸ்திரி தெரு,
மதராஸ்.